# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின்
# 37 ஆம் இலக்க, களியாட்டவரி
# (திருத்த)ச் சட்டம்

---

*[1984, ஒத்தோபர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1984, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 30 | தபாற் செலவு: சதம் 60

1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, களியாட்ட வரி (திருத்த)ச் சட்டம்

[1984, ஒத்தோபர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 65/83
1622

களியாட்ட வரிக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, களியாட்ட வரி (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

267 ஆம் அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. "இக்கட்டளைச்சட்டம் ஏற்புடையதாகவிருக்கும் களியாட்டம்" என்னும் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் களியாட்ட வரிக் கட்டளைச்சட்டத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது :—

> '"இக்கட்டளைச்சட்டம் ஏற்புடையதாகவிருக்கும் களியாட்டம்" என்பது, கொடுப்பனவின்மீது ஆட்கள் அனுமதிக்கப்படும் ஏதேனும் நடனம், போட்டி விளையாட்டு, விளையாட்டு, திரைப் படக் களியாட்டம், கலை நிகழ்ச்சிகள், பாராயணஞ்செய்தல், கழைக்கூத்து அல்லது பல் நிகழ்ச்சிகள் என்று பொருளாகும், ஆனால் மேடை நாடகம், நாடக அரங்கிற்குரியவை, பொம்மலாட்டம், குழுநிலையாடல் என்பனவற்றையும் இதுபோன்ற தன்மையுடைய மேடை நிகழ்ச்சிகளையும் உள்ளடக்காது ;'.

ஏ 077963—2,850 (07/84)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.